

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சட்டமன்றத் தொகுதி தேவகோட்டையில் நடைபெற்ற மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் கூட்டத்தில் சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே. ஆர்.பெரியகருப்பன் சிறப்புரையாற்றினார். மேடையில் வேட்பாளர் எஸ்.மாங்குடி, கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி., முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் உள்ளனர்.



மதுரை உயர்மறை மாவட்ட பேராயர் அந்தோணிசாமி சவரிமுத்துவை மதுரை மாவட்டத்தில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களான மதுரை கிழக்கு அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மத்திய தொகுதி அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், மதுரை வடக்கு தொகுதி கோ.தளபதி எம்.எல்.ஏ.., மதுரை தெற்கு தொகுதி சேடபட்டி மு.மணிமாறன், சோழவந்தான் தொகுதி ஆ. வெங்கடேசன் எம் எல் ஏ., மதுரை மேற்கு தொகுதி வழக்கறிஞர் ரகுபாலாஜி, திருப்பரங்குன்றம் தொகுதி கிருத்திகா தங்க பாண்டியன், மதுரை தெற்கு தொகுதி பூமிநாதன், மேலூர் தொகுதி விஸ்வநாதன் உள்ளிட்டோர் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



மதுரை மாவட்டம் திருமங்கலம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் கிழக்கு ஒன்றியம் பாண்டியன் நகர் பகுதியில் பொதுமக்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார், உடன் ஒன்றிய செயலாளர் தங்கபாண்டியன், தொகுதி பொறுப்பாளர் டிஸ்கோ அலாவுதீன், பொறுப்பாளர் நிரஞ்சன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சியினர், பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.



மதுரை மாவட்டம் சோழவந்தான் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. வாடிப்பட்டி அண்ணா பேருந்து நிலையத்திலிருந்து பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து கழகத்தினர் மற்றும் கூட்டணி கட்சியினர் ஆயிரக்கணக்கானோருடன் தாலுகா அலுவலகம் வரை ஊர்வலம் சென்று தேர்தல் நடத்தும் அலுவலர் சண்முகவேலிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன் கழக நிர்வாகிகள் மு.பால்பாண்டியன், ஆர்.எஸ்.ராம்குமார், பசும்பொன்மாறன், முத்தையன் உள்ளிட்டோர் உள்ளனர்.





தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ச.கணேசன் சங்கரன்கோவில் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் அனிதாவிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் முன்னாள் அமைச்சர் தொகுதி பார்வையாளர் ச.தங்கவேலு, தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், தென்காசி மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.



திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி காங்கிரஸ் வேட்பாளர் வி.பி.துரை தேர்தல் நடத்தும் அலுவலர் ஆயுஸ்குப்தாவிடம் வேட்புமனு தாக்கல் செய்தார்.உடன் முன்னாள் ஒன்றிய அமைச்சர்,தனுஷ்கோடி ஆதித்தன் ராபர்ட் புரூஸ் எம்.பி. தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன் ஆகியோர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இசைமுரசு நாகூர் அனிபா
### ஏப்ரல் 8 (2015)



தமிழகத்தின் பட்டிதொட்டி எங்கும் தமது காந்தர்வ இசையால் – 'கணீர்' குரலால் – "அழைக்கின்றார்... அழைக்கின்றார்... அண்ணா", "ஓடி வருகிறான்.. உதயசூரியன்", "கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே!" போன்ற கருத்தாழமிகு பாடல்களால் கழகக் கொள்கைகளைப் பரப்பி வந்த தூய தொண்டர்.

1952–ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா நடத்திய கழகத்தின் முதல் மாநாடு தொடங்கி, அனைத்து மாநாடுகளிலும் இயக்கப் பாடல்களை பாடியவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் உற்ற உயிரனைய தோழர்.

'இசைமுரசு' எனும் அடைமொழியால், அகிலத்தவரால் அன்பு தவழ அழைக்கப்பட்டவர்.

1989ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. முப்பெரும் விழாவில் இவருக்கு "கலைஞர் விருது" வழங்கப்பட்டது.

முரசொலி அறக்கட்டளை சார்பில் 2002ஆம் ஆண்டுக்கான "கலைஞர் விருதும்", ஒரு இலட்ச ரூபாய் பொற்கிழியும் தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டு பெருமைப்படுத்தப்பட்டார்.

"தன்னுடைய பாடல்கள் மூலம் கழகத் தொண்டாற்றிய இசைமுரசு அனிபா மறைந்தாரே, அவர் புகழ் ஓங்குக!" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தமிழ்நாட்டிலேயே கிணத்துக்கடவு தொகுதியை முன்மாதிரி தொகுதியாக மாற்றுவேன்!

### கழக வேட்பாளர் கே.வி.கே.எஸ். சபரிகார்த்திகேயன் பிரச்சாரத்தில் உறுதி!

கிணத்துக்கடவு, ஏப். 8-

கோவை மாவட்டம் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் மதுக்கரை தாலுக்கா அலுவலகத்தில் நேற்று முன்தினம் காலை தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

அதன் பிறகு அவர் அளித்த பேட்டி வருமாறு:-

"கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆசியோடும், கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆதரவோடும் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளேன். மேற்கு மண்டல கழகப் பொறுப்பாளர் செந்தில் பாலாஜி அவர்களின் ஒத்துழைப்பு, கூட்டணி கட்சி தோழர்கள், கழக உடன்பிறப்புகளின் நல் ஆதரவு ஆகியவற்றோடு தேர்தல் களத்தினை சந்தித்து வருகிறேன்.

இந்தியாவிலேயே இரட்டை இலக்கத்தில் வளர்ச்சி சதவீதத்தை உருவாக்கிய ஒரே முதல்வர் திராவிட மாடல் அரசின் நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்கள். கடந்த ஐந்தாண்டு காலத்தில் நமது அரசு கொண்டு வந்த திட்டங்களும், ஆற்றிய மக்கள் பணியும் தமிழ்நாட்டு வரலாற்றில் இடம்பெறக்கூடியவை.

தமிழ்நாட்டில் கழக அரசின் திட்டங்களால் பயன் பெறாத தனி நபரே கிடையாது என்கிற நிலை தான் நிலவுகிறது. இந்த சூழலில் கிணத்துக்கடவு தொகுதியானது கடந்த 25 ஆண்டுகளாக பின் தங்கி போயுள்ளது. தற்போதைய சட்டமன்ற உறுப்பினரால் எந்த முன்னேற்றமும் இன்றி மக்கள் விரக்தியோடு காணப்படுகிறார்கள்.

எனவே, தற்போது மக்களின் ஆதரவோடு சட்டமன்றம் சென்று தொகுதியின் பிரச்சினைகளை சட்டமன்றத்தில் எடுத்துரைத்து அதற்கான தீர்வினை உடனடியாக பெற்று மக்கள் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் சட்டமன்ற உறுப்பினராக இருப்பேன் என்பதை உறுதிபட கூறுகிறேன்.

நீண்டகாலமாக கிணத்துக்கடவு தொகுதியில் மக்கள் பணியாற்றி மக்களின் நம்பிக்கை பெற்றவனாக இருந்து வருகிறேன். ஆகவே, இந்த முறை இங்கே உதயசூரியன் உதிக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் தொடரும், அதன் வழியே கிணத்துக்கடவு தொகுதி தமிழ்நாட்டில் ஒரு முன்மாதிரி தொகுதியாக மாறும்.

இவ்வாறு அவர் கூறினார்.

உடன் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா அருணாசலம்
### ஏப்ரல் 8 (1981)



கழகம் துவங்கிய நாளிலிருந்தே உறுப்பினராகி, புதுக்கோட்டையின் முதல் நகரச் செயலாளராகவும், நீண்டகாலமாக பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர் இவர்.

மும்முனைப் போராட்டத்தில் பங்கேற்றதோடு, மிசா கைதியாக ஒரு ஆண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெறும் கழக நிகழ்ச்சிகள் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் உரையாற்றும்போது "எனது அருமை நண்பர் மிசா அருணாசலம்" என்று நினைவு கூர்ந்து குறிப்பிடுவதே இவருக்குரிய புகழாரமாக அனைவரும் கருதுகிறார்கள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**